
Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



டிசம்பர்
25
விவிலிய ஞாயிறு

To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**


**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

TO SERVE THE LORD AND HIS PEOPLE



**கிறிஸ்து பிறப்பு (யல்தா) திருநாள்
நல்வாழ்த்துக்கள்**

மலர் 19 டிசம்பர் 2022 இதழ் 12

## இம்மாதம் நினைவு கூர

டிசம்பர் 2022

1 – இருபத்தைந்து நோன்பு ஆரம்பம்

3 – புனித பிரான்சிஸ் சவேரியார்

3




4 – புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு
தமஸ்கு நகரத்து மார் யோவான்

5 – மார் சாபாஸ், அலெக்ஸாந்திரியகாரராகிய மார் கிளீமிஸ்

6 – அந்தியோக்கியக்காரராகிய மார் தியோபிலோஸ்

5



7 – புனித அம்புறோஸ்

8 – தூய கன்னிமரியாவின் அமலோற்பவத் திருநாள்

10 – மார் பஹனானும் சகோதரி சாறாளும் 40 இரத்தசாட்சிகளும்

11 – புனித யோசேப்புக்குக் கிடைத்த காட்சி

14 – புனித சிலுவை யோவான்
புனித ஆபிரகாம் கிதுனோயோ

8




16 – மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமான நாள் (1996)

17 – மார் இரபுலா

18 – யல்தாவுக்கு முன்னைய ஞாயிறு
மயிலாப்பூர் அற்புத சிலுவை

25 – யல்தா திருநாள் (கிறிஸ்துமஸ்)
விவிலிய ஞாயிறு

25



26 – தூய இறையன்னையின் புகழ்ச்சி

27 – குழந்தைகள் கொலையுண்ட தினம்

28 – அரசரும் இறைவாக்கினருமான தாவீது

26








# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 19 டிசம்பர் 2022 இதழ். 12

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

# BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***
***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***
***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***
***Diocese of Marthandam***



இறைஅருளாலும்
திருஆட்சிப்பீடத்தின் இசைவாலும்
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின்
**மேஜர் ஆர்ச்சுபிஷப் - காதோலிக்கோஸ்**
மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
பாவாவிடமிருந்து
நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட
ஆயர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள்,
ரம்பான்மார்கள், குருக்கள், திருத்தொண்டர்கள்,
துறவிகள் மற்றும் இறைமக்கள் ஆகிய
அனைவருக்கும் ஆசிகள்.

Prot. No. CPL 4/2022

**மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு**
**குருக்களுக்கான தொடர் பயிற்சி**

**பாசமிக்க அருட்தந்தையர்களே,**

ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் வணக்கங்கள்!

“தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள் மேல் ஊதி, “தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்” (யோவா 20:21-22). இவ்வார்த்தைகளை கூறி இயேசு ஆண்டவர் திருத்தூதர்களுக்கு குருத்துவத்தை வழங்கினார். “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்” (மாற் 16:15) எனத் திருத்தூதர்களிடம் கூறி திருத்தூதுப்பணியை ஒப்படைத்தார். ஆண்டவர் இயேசு திருத்தூதர்களிடம் ஒப்படைத்த பணியை திருஅவையானது குருத்துவம் என்னும் அருளடையாளம் வாயிலாக செயல்படுத்துகிறது (CCC. 1536). மலங்கரை கத்தோலிக்க திருஅவையின் குருத்துவ திருநிலைப்பாட்டு முறை குருத்துவத்தின் மேன்மையை பின்வருமாறு வருணிக்கிறது. “பிறருக்கு ஊழியம் செய்யும் நோக்குடன் உனக்கு வழங்கப்படுகின்ற இந்த உயர்வான நிலையின் மகிமையை ஞானியை போல நீ புரிந்துகொள்ள வேண்டும்”.

இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகை குருக்களின் புனித வாழ்வை குறித்தும் புதுப்பித்தலை குறித்தும் தெளிவாக கூறியுள்ளார். “கத்தோலிக்க குருவான தாங்கள் அனைத்திலும் திருஅவையின் அறிவுரைக்கேற்ப வாழ வேண்டும். உங்களுடையவும் பிறருடையவும் ஆன்ம ஈடேற்றத்திற்காக ஆர்வமுடன் முயற்சி செய்வது உங்கள் கடமையாகும். பிறரது ஆன்ம ஈடேற்றத்தில் கடவுளின் உடன் பணியாளர் என்றநிலையில் சுய ஆன்ம மீட்பை சுய முயற்சியினால் அடைய வேண்டும். இவ்வாறு நீங்கள் சுய முயற்சியினாலும் இறையருளின் உதவியாலும் உங்களை புனிதப்படுத்தி கொள்ள கடமைப்பட்டிருக்கிறீர்கள்” (விழிப்புள்ள மேய்ப்பன் - 23).

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையில் இறையூழியர் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகை மற்றும் மார் தியோபிலஸ் ஆண்டகை ஆகியோரின் திருத்தூதுவ பணியோடு இணைந்து குருத்துவ திருப்பணிகள் செய்தவர்கள் முதல் இன்று வரை திருப்பணி செய்த குருக்கள் தங்கள் விலைமதிக்க முடியாத குருத்துவ திருப்பணியால் பலவகை உதவிகளை நம் திருஅவைக்கும் இந்த தேசத்திற்கும் வழங்கியதை நன்றியுடனும் அன்புடனும் நினைவு கூர்கின்றேன். மறுவொன்றிப்பு, மறைத்தூதுப்பணி போன்றவற்றிற்காக தங்களை அர்ப்பணம் செய்த குருக்கள் மலங்கரை திருஅவைக்கும், அனைத்துலக திருஅவைக்கும் நம் நாட்டின் வளர்ச்சிக்கும் வழங்கிய, இப்போது வழங்கி கொண்டிருக்கின்ற பன்முக திருப்பணிகளை திருஅவையின் பெயரில் புகழ்ந்து பாராட்டுகின்றேன். ஒவ்வொரு காலகட்டத்திலும் குருத்துவ வாழ்வு சவால்களை சந்தித்துதான் முன்னேறியிருக்கின்றது. கடவுளையும், திருஅவையையும் குருத்துவத்தையும் இருள்மூட வைப்பதும் அதற்கு இறைமக்களையும் சமூகத்தையும் கட்டாயப்படுத்துகின்றசெயல்பாடுகள் உலகில் உருவாகியிருக்கின்றன. இறைவனின் அருளால் இத்தகைய சவால்களை கடந்து 2022-ல் வந்திருக்கிறோம் என்பது ஒரு உண்மையாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடலாகாது.

நாம் வாழும் இந்த நாட்களில் குருத்துவமும், குருத்துவ திருப்பணிகளும் மிகுந்த சவால்களை சந்திக்கின்றன. இந்த சவால்களை சந்திப்பதற்கும் பெற்று கொண்ட குருத்துவ திருப்பணிகளை ஆசீர்வாதமாக செய்யவும் நமக்கு இயல வேண்டும். அதற்கு உதவும் வகையில் (கிழக்கத்திய திருஅவை சட்டம் (CCEO 372) மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையின் குருக்களுக்காக தொடர் பயிற்சி வழங்க வேண்டுமென்று தூய ஆயர் மாமன்றம் முடிவெடுத்தது. மதிப்பிற்குரிய குருக்களை இத்தொடர் பயிற்சி நிகழ்விற்கு இதயபூர்வமாக அழைக்கின்றேன். 2023, 2024, 2025 இந்த மூன்று வருடங்களில் இந்த பயிற்சியை நிறைவு செய்ய விரும்புகிறேன். நமது திருஅவையில் மறைமாவட்ட குருக்களாகவும் துறவறகுருக்களுமாக 1046 பேர் திருப்பணி செய்கின்றனர். 50 பேர் அடங்கிய 20 குழுக்களாக இப்பயிற்சி நடத்தப்படுகிறது.

**I Batch - 2010 முதல் 2018 வரை குருப்பட்டம் பெற்றவர்கள்**

1. 2023 பெப்ரவரி 6 திங்கள்கிழமை மாலை 4.00 மணி முதல் பெப்ருவரி 10 வெள்ளிக்கிழமை மதியம் 1.00 மணி வரை
2. 2023 மே 8 திங்கள்கிழமை மாலை 4.00 மணி முதல் மே 12 வெள்ளிக்கிழமை மதியம் 1.00 மணி வரை

**II Batch - 2019 முதல் 2022 வரை குருப்பட்டம் பெற்றவர்கள்**

1. 2023 ஜூலை 24 திங்கள்கிழமை மாலை 4 மணி முதல் ஜூலை 28 வெள்ளிக்கிழமை மதியம் 1.00 மணி வரை



2. 2023 நவம்பர் 6 திங்கள்கிழமை மாலை 4 மணி முதல் நவம்பர் 10 வெள்ளிக்கிழமை மதியம் 1.00 வரை

முதலில் பெயர் பதிவு செய்யும் 50 நபர்களுக்கு முதல் பிரிவில் வாய்ப்பு வழங்கப்படும். மற்றவர்கள் இரண்டாவது பிரிவில் பங்கேற்கலாம். 2010-ற்கு முன் குருப்பட்டம் பெற்றவர்களுக்கு 2024, 2025 ஆண்டுகளில் பயிற்சி வழங்கப்படும். இதனை குறித்த கூடுதல் தகவல்களை காதோலிகேட் மையத்திலிருந்து விரைவில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தொடர் பயிற்சிகள் நமது திருஅவையின் தலைமை செயலகமாகிய காதோலிகேட் மையத்தில் வைத்து நடத்தப்படும். மார் இவானியோஸ் ஆண்டகையின் கல்லறை அமைந்துள்ள சிற்றாலயத்தில் திருஅவை தலைவரோடு இணைந்து அல்லது தனியாக திருப்பலி ஒப்புகொடுக்க வசதிகள் செய்து தரப்படும். குருத்துவ திருப்பணியுடன் தொடர்புடைய கருத்துரைகளை அனுபவமிக்க பேராசிரியர்கள் வழங்குவார்கள். திருஅவையின் கூரியா ஆயர் மேதகு ஆன்றனி மார் சில்வானோஸ் அவர்கள் பயிற்சிகளை தலைமையேற்று நடத்துவர்கள். நமது திருஅவையின் அனைத்து குருக்களும் இத்தொடர் பயிற்சி திட்டத்தில் பங்கேற்க வேண்டும். மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை மறுவொன்றிப்பு இயக்கத்தின் நூற்றாண்டிற்குள் நுழையும் போது இக்கால கட்டத்தில் மறைத்தூது பணி செய்யும் நமது ஆர்வத்தையும் குருத்துவ திருப்பணியையும் காலத்திற்கு ஏற்றவாறு நற்செய்தியின் சுவையுடைதாக மாற்றி இறை சமுகத்திற்கும் பொதுசமூகத்திற்கும் வழங்குவோம். நமது திருஅவையின் மறைமாவட்டங்களிலும், துறவற இல்லங்களிலும் பணிபுரியும் பாசமிக்க குருக்களை பயிற்சிக்காக இதயபூர்வமாக அழைக்கிறேன். அனைவரையும் சந்திக்க முடியும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆண்டவர் இயேசு திருஅவைக்கு வழங்கிய மிக பெரிய ஆசீரே குருத்துவம். திருஅவையின் பல்வேறு துறைகளில் நீங்கள் வழங்கி வரும் திருப்பணிகளுக்கு திருஅவையின் பெயரில் இதயபூர்வமாக நன்றி கூறி பாராட்டி மகிழ்கிறேன். இறைவனாகிய ஆண்டவர் உங்கள் குருத்துவ திருப்பணிகளை தமது அருட்கரத்தால் பலன் தருவதாக மாற்றட்டும்.

இறை அன்னையாகிய தூய கன்னிமரியாவினுடையவும், திருத்தூதர்களினுடையவும், குறிப்பாக நம் தந்தையாகிய மார் தோமா சீடருடையவும் வேண்டுதல்களால் இது அமைவதாக. ஆமென்.

*இவண்,*
ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்,

+Baselios Cleemis

**✝ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்

**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir 8/2022 15.11.2022

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே, அருட் சகோதரர்களே, அருட்கன்னியர்களே, இறைமக்களே,***

மலங்கரை கத்தோலிக்க திருஅவையானது நவம்பர் மாதம் 20-ம் தேதி ஞாயிற்றுகிழமை தகவல் தொடர்பு தினத்தை கொண்டாடுகின்றது. உலகையே ஒரு கிராமமாக மாற்றியிருக்கும் தொழில்நுட்பம், தகவல் தொடர்பை மிகவும் எளிதாக்கியுள்ளது. தகவல் தொடர்பு ஊடகங்கள் மனிதனுடைய வாழ்க்கையுடன் இரண்டறகலந்துவிட்டன. கேட்போர் பயனடையும்படி தேவைக்கேற்றவாறு அருள்வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகள் பேசும் படி பவுலடியார் எபேசு மக்களை அறிவுறுத்துகிறார் (எபே 4:29). மெய்யை பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும் ஊடகங்கள் பரப்பினால் உண்மையை யார் அறிய முடியும்? சமூக தொலை தொடர்பு கருவிகள் தகுந்த முறையில் பயன்படுத்தினால் மனித சமூகத்திற்கு அது ஓர் ஆசீராக அமையும். அதே வேளையில் அளவுக்கு அதிகமான பயன்பாடு மனித சமூகத்திற்கு தடுமாற்றத்தையே உருவாக்குகின்றன. சமூக தொடர்பு ஊடகங்கள் கொரோனா காலத்தில் அனைவரையும் சென்றடைந்து விட்டது. அதன் நன்மை தீமைகளை ஆய்ந்தறிந்து பயன்படுத்தி கொள்ள நாம்



கடமைப் பட்டிருக்கிறோம். நமது மறைமாவட்டத்தில் தகவல் தொடர்பு தினத்தை முன்னிட்டு நவம்பர் 20-ம் நாள் “இறை அறிவில் வளர்வோம்” என்ற வினாடி வினா போட்டி 2021 நவம்பர் முதல் 2022 அக்டோபர் வரையிலான மலங்கரை விளக்கு இதழ்களிலிருந்து நடத்தப்படுகிறது. இதில் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்க அனைவரையும் அன்பாய் கேட்டுக்கொள்கிறேன். அனைவரும் இதற்கு மலங்கரை விளக்கின் பங்கு முகவர்களை தொடர்பு கொள்ளவும். இந்த தினத்தின் சிந்தனைக்காக திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கிய உலக தகவல் தொடர்பு தின செய்தியின் தமிழாக்கம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நாளில் மறைமாவட்ட ஊடக பணிகளுக்காக எல்லா பங்குகளும் நன்கொடை வழங்குவது நமது வழக்கம். இந்த நன்கொடையை 27-ம் தேதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன் மறைமாவட்ட நிதிஅலுவலகத்தில் ஒப்படைக்கும் படி கேட்டு கொள்கிறேன். இத்தருணத்தில் ஊடகப் பணிக்குழுவில் பணியாற்றுகின்ற அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் அனைவருக்கும் நன்றியும் பாராட்டுதலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

***இவண்,***

**† மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர்

**Most Rev. Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir 9/2022 24.11.2022

***இறையேசுவில் என் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே மற்றும் இறைமக்களே!***

நம் மறைமாவட்டத்தின் இரண்டாம் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு நம்மை இறையன்பில் வழிநடத்திய மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் ஆண்டகை அவர்களின் குருத்துவநிலைப்பாட்டின் பொன்விழாவும் ஆயரான திருநிகழ்வின் வெள்ளிவிழாவும் இவ்வாண்டில் ஒருங்கே அமைகின்றன. இந்நல்தருணத்தில், நம் மறைமாவட்ட மக்களை அன்பு செய்து மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயராக பல்லாண்டுகள் பணிபுரிந்த மேதகு ஆயரோடு இறைவனுக்கு நன்றி கூறி ஆயரை வாழ்த்துவது நம் அனைவரின் அன்புநிறை பொறுப்பாகும். டிசம்பர் மாதம் 10-ம் நாள் சனிக்கிழமை காலை 6.45 மணிக்கு மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து ஆயரோடு இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கவும், தொடர்ந்து வாழ்த்துக்கூட்டத்தில் பங்கெடுத்து மனதார வாழ்த்தி தொடர்ந்து நடைபெறும் அன்புவிருந்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கவும் மகிழ்ச்சியுடன் அழைக்கிறேன்.


இறையாசீர் என்றும் உங்களுடன்.

*என்றும் அன்புடன்,*

**† மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர்

**நிகழ்வன**

காலை 6.30 மணிக்கு – **காலை ஜெபம்**
காலை 6.45 மணிக்கு – **ஆயருக்கு வரவேற்பு**
காலை 7.00 மணிக்கு – **கூட்டு திருப்பலி**
**வாழ்த்துக் கூட்டம்**





# குருக்கள் செய்திகள்



மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் இறைபணியாற்றிய அருட்தந்தை ஆன்றணி அவர்கள் 01-11-2022 அன்று காலை 5.40 மணிக்கு இறைபாதம் அடைந்தார். இவரது நல்லடக்க சடங்குகள் 02-11-2022 அன்று காலையில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் மற்றும் மேதகு ஆயர் தோமஸ் மார் எவ்சேபியூஸ் ஆண்டகை அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. அந்நாளில் அடக்க திருச்சடங்குகளில் ஆயர்கள், அருட்தந்தையர்கள், அருட் கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் பலர் கலந்துக்கொண்டு அருட்தந்தை அவர்கள் நமது மறைமாவட்டத்தில் பல பொறுப்புக்களை வகித்து பல பங்குகளின் பங்குதந்தையாக சிறப்பாக இறைபணியாற்றினார்கள், குறிப்பாக மறைமாவட்ட மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகவும் அறிவு மற்றும் தொழில் வளர்ச்சிக்காகவும் பல முயற்சிகளை மேற்கொண்டு சிறப்புற செயல்பட்டார்கள். அவர்களின் ஆன்மா இறைவனின் நித்திய இளைப்பாறுதல் அடைய ஜெபிப்போம்.

# குருமட செய்திகள்

செபமாலை வணக்க மாதமாகிய அக்டோபர் மாதம் 30-ம் நாள், காட்டுவிளை மாதா மலைப்பகுதியில் நடைபெற்ற செபமாலைப் பவனியில் இளங்குருமட மாணவர்கள் கலந்துகொண்டு இறையாசீர் பெற்றனர்.



நவம்பர் மாதம் 22-ம் தேதி கோட்டயம் புனித தோமையார் திருத்தூதுவ குருத்துவக் கல்லூரியின் மூன்றாமாண்டு தத்துவவியல் குருமாணவர்கள் புனித எப்ரேம் இளங்குருமடத்திற்கு வருகைத்தந்து இளங்குருமட மாணவர்களைச் சந்தித்தனர். அவர்களுடன் வந்த குருத்துவக் கல்லூரித் துணை அதிபர் அருட்தந்தை லின்றோ அவர்கள் இளங்குருமட ஆலயத்தில் சீறோ மலபார் திருப்பலி நிறைவேற்றினார்கள்.

# மேரி மக்கள் துறவற சபை

### மாகாண தலைவி மதர் அனிலா கிறிஸ்டி அவர்களின் நாமவிழா

புனித சூசையப்பர் மாகாணத்தலைவி மதர் அனிலா கிறிஸ்டி அவர்களின் நாமவிழா கொண்டாட்டங்கள் 19-11-2022 அன்று மாலை 11.00 மணிக்கு ஜெபத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருப்பலியும், வாழ்த்துக் கூட்டவும் நடைபெற்றது. ஏராளமான அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டு மதர் அவர்களை வாழ்த்தினர். இவ்விழாவில் Mother General Mother Lidiya அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.



மேரி மக்கள் கன்னியர் சபையின் 2-வது கிளைமடமாகிய கிராத்தூர் மடத்தின் பவள விழா (75) கொண்டாட்டமானது மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்களின் தலைமையில் சபையின் Superior General Mother Lidiya D.M, Mother Provincial Mother Anila Christy D.M, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாட்டங்களை சிறப்பித்தனர்.






# நற்செய்தி சங்கம்

நவம்பர் மாத நற்செய்தி சங்க வகுப்பானது 12-11-2022 அன்று தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது. இதில் நற்செய்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கொல்லங்கோடு மறைவட்டத்தில் வைத்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் தலைமையில் கொல்லங்கோடு மறைவட்ட குருக்கள் இணைந்து மறைவட்டத்தில் நற்செய்தி சங்கம் தொடங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில் மலங்கரை கத்தோலிக்க நற்செய்தி சங்க இயக்குநர் அருட்தந்தை பெனடிக்ட் OIC, செயலர் அருட்சகோதரி மேரி பிரசாத் DM கலந்துகொண்டு உரையாற்றினர்.



# MCA
## Diocese of Marthandam

### MCA கூடுகை

MCA செயற்குழு கூட்டமானது அருட்தந்தை இராபின்சன் அவர்கள் தலைமையில் 27.11.2022 அன்று MCA அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம் டிசம்பர் 18-ம் தேதி நடத்த வேண்டும் என்றும், அன்றைய தினம் நமது மறைமாவட்டத்தில் உள்ள 35 ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## கோல்பிங் தின கொண்டாட்டம்

கோல்பிங் இந்தியா சார்பாக ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் கோல்பிங் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான கோல்பிங் தின கொண்டாட்டமானது 22.10.2022 அன்று மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. இவ்விழாவில் அருட்தந்தை நெல்சன் அவர்கள் போதை ஒழிப்பு மற்றும் ஊடகங்களின் தாக்கம் குறித்து கருத்துரை வழங்கி



னார்கள். அதனை தொடர்ந்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக கோல்பிங் இந்தியா தேசிய அலுவலக இயக்குநர் அருட்தந்தை மரிய சூசை அவர்கள் கலந்து கொண்டார்கள். மார்த்தாண்டம் மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். கோல்பிங் குடும்பங்களின் வளர்ச்சி மற்றும் அவற்றின் திட்டங்கள் வழியாக அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரங்கள் உயர்வடைந்து வருகின்றன. மேலும் இத்திட்டம் பல்வேறு வளர்ச்சி நிலைகளை எட்ட வேண்டும் என்று சிறப்பு விருந்தினர்கள் வாழ்த்தினார்கள். தொடர்ந்து 25 ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டு வரும் கோல்பிங் குடும்பங்களுக்கு சான்றிதழ்களும், கேடயமும் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்ட கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்ளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. பின்னர் இறுதி ஜெபத்துடன் விழா நிறைவு பெற்றது. இவ்விழாவில் மொத்தம் 765 கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## குழந்தைகள் தின விழா

தளிர்கள் உலக பயனாளிகளுக்கான குழந்தைகள் தின விழா 12.11.2022 அன்று மிட்ஸ் கலை அரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மறைமாவட்ட முதன்மை குரு மோண்.ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழக சமூகப்பணி மையத்தின் இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் விருந்தினர்களை வரவேற்றார்கள். அருட்தந்தை மார்ட்டின் அவர்கள்



போதைக்கு அடிமையாகும் குழந்தைகள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து கருத்துரை வழங்கினார்கள். அதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் குழந்தைகள் தின வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர் 10 மற்றும் 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு கேடயம் வழங்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு விழாவானது நிறைவு பெற்றது. இவ்விழாவில் மொத்தம் 155 மாணவ மாணவிகளும் 193 பெற்றோர்களும் கலந்து கொண்டனர் .

## உதவி திட்டங்கள்

15.11.2022 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக 15 மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 60 உறுப்பினர்களுக்கு ரூபாய் 30,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

31.10.2022 அன்று SAFP Memorial திட்டத்தின் வழியாக உயர்கல்வி பயிலும் 14 மாணவ மாணவர்களுக்கு நபருக்கு ரூபாய் 25,000/- வீதம் மொத்தம் 3,50,000/- கல்வி கடன் உதவித் தொகை வழங்கப்பட்டது.

07.11.2022 அன்று நடைக்காவு ஆலயத்தில் வைத்து களியக்காவிளை மண்டல சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு ஒரு மாத கால ஆரி கலை பயிற்சியானது மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது.

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்ட பயனாளிகளுக்கு மாத்தூர்கோணம், மரியகிரி மற்றும் நடைக்காவு, செருப்பாலூர், ஆற்றூர் ஆகிய பகுதிகளில் வைத்து கிளஸ்டர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களில் மொத்தம் 57 பயனாளிகள் கலந்து கொண்டனர். நவம்பர் 08, 2022 முதல் நவம்பர் 11, 2022 வரை குடும்ப வளர்ச்சி திட்ட தேசிய அலுவலகத்தில் நடைபெற்ற காலாண்டு ஆய்வு கூட்டத்தில் குடும்ப வளர்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

17.11.2022 மற்றும் 18.11.2022 ஆகிய தினங்களில் CTWWC திட்ட பணிகளை ஆய்வு செய்வதற்காக CRS அமைப்பின் இயக்குநர் திருமதி.எலிசபெத் அவர்களுடன், சென்னை CRS கிளை அலுவலகத்தி லிருந்து இரண்டு அதிகாரிகளும் மற்றும் தமிழக சமூகப்பணி மைய இயக்குநர் மற்றும் பணியாளர்களும் வருகை தந்து குழந்தைகள் காப்பக பொறுப்பாளர்கள் மற்றும் பயனாளிகளை சந்தித்து உரையாடினர். பல ஆலோசனைகளும் வழங்கினர். 30.10.2022 அன்று தளிர்கள் உலக பயனாளிகளுக்கு மிட்ஸ் அறிவுத் திறன் பயிற்சி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இத்தேர்வில் மொத்தம் 102 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை மரிய அற்புதம்
டிசம்பர் 08



அருட்தந்தை மரியதாசன்
டிசம்பர் 08



அருட்தந்தை ஏசுதாஸ்
டிசம்பர் 25



அருட்தந்தை டார்பெல்லோ கிறிஸ்டஸ்
டிசம்பர் 25



அருட்தந்தை
வினு இம்மானுவேல்
டிசம்பர் 25




அருட்தந்தை அருள்தாஸ்
டிசம்பர் 27



அருட்தந்தை ஜாண். எஸ்
டிசம்பர் 27



அருட்தந்தை அருள்ஷைஜு
டிசம்பர் 27



அருட்தந்தை ஜெபின் ஜாண்
டிசம்பர் 27



# மறைவட்ட செய்திகள்

## கொல்லங்கோடு மறைவட்டம்

கொல்லங்கோடு மறைவட்ட குருக்களுக்கான கூடுகையானது 14-10-2022 அன்று மறைவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை இராபின்சன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைவட்ட புது இயக்குநர் அருட்தந்தையர்கள் நியமிக்கப்பட்டனர். அத்தோடு மறைவட்ட நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டு புது தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

### கொல்லங்கோடு மறைவட்ட இயக்குநர்கள்

| | |
|---|---|
| Vicar - Fr. Robinson | Secretary - Fr. Jeevan |
| MCA - Fr. Ajeesh | MCYM - Fr. Jenitto |
| MCCL - Fr. Sajeev | Catechism - Fr. Jeevan |
| Media - Fr. Jeevan | Arulvalviyam - Fr. Justin |
| Family Apostolate | Fr. Justin |
| Altar boys | Fr. Jose |
| Vocation Promoter | Fr. Jose |
| Bible Apostolate | Fr. Wilfin |
| Labour Commission | Fr. Jeevan |

## திருமண ஆயத்தப்பயிற்சி

**டிசம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 16, 17 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

**தீபாவளி கொண்டாட்டம்** (Diwali Celebration)

கிராத்தூர். மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 22-10-2022 அன்று காலை 9.30 மணியளவில் தீபாவளி கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பலவிதமான கலைப்போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் இவ்விழாவில் மாணவர்கள் ஒன்றாக உணவு சமைத்து தங்களுடைய அன்பின் வெளிப்பாடாக ஷாலோம் முதியோர் இல்லத்து பெரியவர்களுக்கு தாங்கள் சமைத்த உணவை வழங்கினர்.

**வினாடி வினா** (Quiz)

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 26-10-2022 அன்று வினாடி வினா போட்டி நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர். ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் முதலாமாண்டு மாணவர்களுக்கு நடத்தப்பட்டது.

**கண்காட்சி** (Exhibition)

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டம் கல்வியியல் கல்லூரியில் 11-11-2022 அன்று தேசிய கல்வி தினம் கொண்டாடப்பட்டது. இதன்பொருட்டு முதலாமாண்டு ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் வேத காலம் முதல் தற்காலம் வரையிலான கல்வி முறையினை எடுத்துக்காட்டும் வண்ணமாக கண்காட்சி ஒருங்கமைக்கப்பட்டது. இந்த கண்காட்சியினைக் காண மார் கிரிகோரியோஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, மார் கிரிகோரியோஸ் உயர்நிலைப்பள்ளி, மார் கிரிகோரியோஸ் ஆரம்பப்பள்ளி, லிற்றில் பிளவர் CBSE School, Malankara Catholic College, Mariagiri ஆகிய பள்ளி கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**குடியுரிமை பயிற்சி முகாம் 2022**

மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்காக 16-11-2022 அன்று கல்லூரியின் தாளாளர் பேரருட்தந்தை S. வர்க்கீஸ் அடிகளார் அவர்கள் தலைமையில், முதல்வர் ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் முன்னிலையில் குடிமைப் பயிற்சி முகாமானது தொடங்கப்பட்டது. இந்த







முகாம் 16-11.2022 முதல் 18-11-2022 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. முதல் நாளன்று 'பெண்களின் உரிமைகள் மற்றும் குழந்தை பாலியல் தொந்தரவு' குறித்த வகுப்பினை Advocate. Vinu Vinayagan (Advocate, Professor, Cheruvarakonam) அவர்கள் சட்ட நெறிமுறைகள் மற்றும் ஒவ்வொரு சட்டங்களும் அதன் பயன்களும் பற்றி அருமையாக கூறினார். மேலும் அன்றைய தினம் மதியம் 2 மணியளவில் காவல் நிலைய கள ஆய்வு சென்றனர். அன்று இரவு பலவிதமான கலை நிகழ்ச்சிகளை மாணவர்கள் நிகழ்த்தினர்.

2-வது நாளன்று 'நுகர்வோர் உரிமைகள் சட்டம்' என்னும் தலைப்பில் சுமார் 3.00 மணியளவில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்து Advocate. Vinu Vinayagan (Advocate Professor, Cheruvarakonam) வகுப்புகள் நடைபெற்றது. அன்றைய தினத்தில் தீயணைப்பு துறையினர் ஆபத்தில் சிக்கியவர்களை மீட்பது பற்றியும், தீ விபத்து ஏற்பட்டால் தன்னை பாதுகாப்பது பற்றிய ஒரு மாதிரி நிகழ்வை காண்பித்தார்கள். அன்று இரவு பலவிதமான கலை நிகழ்ச்சிகளை மாணவர்கள் நிகழ்த்தினர்.

3-வது நாளன்று அருட்தந்தை. பிரின்டோ பிலிப் அவர்கள் தலைமையில் (Varuthattu Parish Priest & Advocate), 'அரசியலமைப்பு மற்றும் அடிப்படை உரிமைகள்' என்னும் தலைப்பில் முகாமானது நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் யோகா பயிற்சிகள் திரு. சகாய தாசன் உடற்கல்வி பேராசிரியர் அவர்களால் வழங்கப்பட்டது. இந்த குடியுரிமைப் பயிற்சி முகாமின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் பத்ம ரேகா அனைத்து நிகழ்வுகளையும் ஒழுங்குபடுத்தினார். 18-11-2022 அன்று மதியம் சுமார் 2.00 மணியளவில் குடியுரிமைப் பயிற்சி நிறைவு விழாவானது கொண்டாடப் பட்டது. அதில் பேராசிரியர். சதீஷ் அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் திரு ஏஞ்சல் பெலிக்ஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் தாளாளர் தந்தை S.வர்க்கீஸ் அடிகளார் அவர்கள் மதிப்புமிக்க முகவரியினை வழங்கினார். மேலும் இந்த முகாமில் மாணவர்களுக்கு பலவித கலை நிகழ்ச்சி போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த முகாமில் அனைத்து பேராசிரியர்களும், அனைத்து ஆசிரியரல்லாத பணியாளர்களும் கலந்துகொண்டார்கள். இந்த முகாமானது பேராசிரியர் ஜெபா ஷெரின் அவர்களின் நன்றியுரையோடு மாலை சுமார் 4.30 மணியளவில் நிறைவுற்றது.

# St. Mary’s CBSE School, Mariagiri

### குழந்தைகள் தினம் மற்றும் பள்ளி ஆண்டுவிழா

குழந்தைகள் தின விழாவானது. 24-11-2022 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. மறைமாவட்ட குருகுலமுதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அவர்கள் தலைமை தாங்கினார்கள். டாக்டர். ஜெ. தம்பி தங்ககுமரன் அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். இறுதியில் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பள்ளி ஆண்டு விழாவானது 25-11-2022 அன்று மாலை 3.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை மிக சிறப்பாக நடைபெற்றது. நமது மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள்தலைமை தாங்கினார்கள். பள்ளியின் தாளாளர் அருட்தந்தை வினுகுமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். சிறப்பு விருந்தினர்களின் உரையை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஏராளமான அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், பெற்றோர்கள், முன்னாள் மாணவர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புனித எப்ரேம் ம.சி.க மேல்நிலைப்பள்ளி சூரியகோடு

பள்ளிக்கல்வித்துறை சார்பில் கன்னியாகுமரி வருவாய் வட்ட அளவில் நடைபெற்ற பள்ளிகளுக்கான குடியரசுதின மற்றும் பாரதியார்தின தடகள விளையாட்டுப் போட்டிகளில் சூரியகோடு, புனித எப்ரேம் ம.சி.க மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் S.S. Aashin, R.J. Jithu, T.S. Aswanth ஆகியோர் ஓட்டப்பந்தயத்திலும் U-17 Hand ball மற்றும் U-19 Hand ball ஆகிய போட்டிகளிலும் முதலிடம் பெற்று மாநில அளவிலான போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.






# LITTLE FLOWER MATRICULATION SCHOOL PUSHPAGIRI

### Little Flower Blooming Buds Academy Inauguration

The Civil Service Foundation Course with the co-ordination of IAS HUB Civil Service Academy, Thiruvananthapuram, was inaugurated in the School. Little Flower Blooming Buds Academy was inaugurated by Mrs. Remya Roshini IPS along with Rev. Fr. Alvin Abraham Simon (Manager, IAS HUB) and Rev. Fr. Saji Mekkattu (Administrator, IAS HUB). This academy could provide coaching such as NEET, IIT – JEE, IAS, IFS, and IPS Entrance Examinations.



### 18th Annual Day Celebrations

18th Annual Day was celebrated on 18th Nov 2022 with the presence of His Excellency Most Rev. Dr.Vincent Mar Paulos, Bishop of Marthandam.

Dr. Alexander Jacob IPS the Nodal Officer of National University for Police Sciences and Security Studies, former DGP Kerala Police as Chief Guest, Rev. Mother. Dr. Anila Christy D.M the Provincial Superior, Rev. Fr. Ajeesh Kumar, the Parish Priest, M.S.C Church Pushpagiri, Correspondent Rev. Sr. Angel Therese D.M, Directress Rev. Sr. Lissa Francis D.M, Principal Rev. Sr. Joby George DM, Vice-Principal Rev. Sr. Christy Maria D.M, and Accountant Rev. Sr. Jossy Maria D. M.

# ஆயரின் நவம்பர் மாத நிகழ்வுகள்



4 ➢ MJKM பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கி தலைவர் உரையாற்றினார்.

6-10 ➢ பெங்களூரில் வைத்து நடைபெற்ற இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை கூடுகையில் கலந்துக் கொண்டார்.

13 ➢ நடைக்காவு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்

14-16 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

17 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் 2021 -'22 -ம் கல்வியாண்டில் புதிதாக அடியெடுத்து வைத்த மாணவர்களின் வரவேற்பு நிகழ்ச்சியில் தலைமை தாங்கினார்.

17 ➢ சிவலோகம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.



18-19 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

18 ➢ புஷ்பகிரி புனித குழந்தை தெரசாள் பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கி தலைவர் உரையாற்றினார்.

19 ➢ மேரி மக்கள் மாகாண தலைவி மதர் அனிலா கிறிஸ்ட்டி அவர்களின் நாமவிழா நன்றி திருப்பலியை தலைமையேற்று நடத்தினார்.

20 ➢ மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலய இறுதி நாள் திருவிழா நிகழ்வில் கலந்துக்கொண்டு திருப்பலி நிறைவேற்றி, புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

22-23 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

22 ➢ கிராத்தூர் மேரிமக்கள் துறவற இல்லத்தின் ஜூபிலி நிறைவை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

24 ➢ பாளை மறைமாவட்டம் மகாராஜ ஆலயத் திருவிழாவில் கலந்துக்கொண்டு திருப்பலி நிறைவேற்றி, புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

25 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியியல் (Pneumatology and Grace); பற்றி வகுப்பு எடுத்தார்.

25 ➢ மரியாகிரி புனித மரியன்னை பள்ளிக்கூட ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கி தலைவர் உரையாற்றினார்.

26 ➢ மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸ்டோஸ்டோம் ஆண்டகையின் குருத்துவ பொன்விழா மற்றும் ஆயர் திருநிலைப்பாட்டின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தில் கலந்துக் கொண்டு வாழ்த்தினார்.

30 ➢ புனித மரியன்னை உயர்நிலை குருத்துவ பயிற்சியகத்தின விழாவில் கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்.


# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.12.2022 | Thursday | <br>5.00 pm | Holy Mass<br>Holy Mass | Puthur<br>Vimalagiri-Kottayam |
| 02.12.2022 | Friday | <br><br>2.00 pm | Jubilee Celebration -<br>St. Xavier's College<br>School Day | Chungankadai<br><br>Christuraja -<br>Marthandam |
| 03. 12.2022 | Saturday | 7.30 am<br>4.00 pm | Holy Mass<br>Kaliyakkavilai District<br>Catechism<br>Prize Distribution | Palavilai<br><br><br>Sooraicode |
| 04. 12.2022 | Sunday | 8.00 am | Holy Mass<br>MCYM Sports Meet<br>Holy Mass | Vimalapuram<br>Elavuvilai<br>Mecode |
| 05.12. 2022 | Monday | | Class | St. Mary's Major<br>Seminary |
| 06.12.2022 | Tuesday | | Presbyteral Council<br>Class | Bishop House<br>St. Mary's Major<br>Seminary |
| 07.12.2022 | Wednesday | <br><br>3.00 pm<br>6.30 pm | Class<br><br>UCC<br>UCCC | St. Mary's Major<br>Seminary<br>Kottar Bishop's House<br>Bishop's House |
| 08.12. 2022 | Thursday | | Class<br><br>Christmas Celebration | St. Mary's Major<br>Seminary<br>Christ Nagar<br>School Trivandrum |
| 09.12.2022 | Friday | <br><br>3.00 | Class<br><br>Save a Family Charity<br>Distribution | St. Mary's Major<br>Seminary<br><br>Bishop's House |
| 10.12.2022 | Saturday | | Jubilee Celebration of<br>Aboon Chrysostom<br>Preaching | Cathedral<br><br>Madurai |



| | | | | |
|---|---|---|---|---|
| 11.12.2022 | Sunday | | Preaching<br><br>Preaching | St. Xaviers'sCollege<br>Palayamkottai (CRI)<br>Madurai |
| 12.12.2022 | Monday | | Pilgrimage | Vellankanni |
| 14.12.2022 | Wednesday | | Class<br><br>MCYM - Orientation<br>Camp | St. Mary's Major<br>Seminary<br><br>Trivandrum |
| 15.12.2022 | Thursday | | Class | St. Mary's Major<br>Seminary |
| 16.12.2022 | Friday | 12.30pm | Christmas Celebration | MIDS |
| 17.12.2022 | Saturday | 9.00am<br><br>12.30pm<br>4.00pm | Vincent de Paul - Meet<br><br>Mother's Forum - Meet<br>Benefit Fund - Meet | Mar Ephraem<br>Nagar<br>Chelllamkonam<br>Bishop's House |
| 18.12.2022 | Sunday | 10.00am<br><br>2.00 pm<br>3.30pm | Labour Commission<br>Meetting<br>Upadesimar Meet<br>MCA - Christmas<br>Celebration | <br>Kandanvilai<br>Bishop's House<br>Mar Ephraem<br>Nagar |
| 19.12.2022 | | | Recollection | Bishop's House |
| 20.12.2022 | Tuesday | | Minority Commission<br>Meeting | Chennai |
| 21.12.2022 | Wednesday | | UCCC Christmas<br>Celebration | Marthandam |
| 22.12.2022 | Thursday | 3.00 pm | Christmas Celebration | MIDS |
| 23.12.2022 | Friday | 10.00am<br>12.30pm<br>6.30 pm<br>8.00 pm | Grand Parents Meet<br>Christmas Celebration<br>Homily<br>Christmas Celebration | Mar Ivanios School<br>Bishop's House<br>Mulaguvilai<br>Changai |
| 24.12.2022 | Saturday | | Christmas – Holy Mass | Puspagiri |
| 26.12.2022 | Monday | 9.30am<br>6.30pm | Baptism<br>UCC Christmas<br>Celebration | Fathimanagar<br>Vimalapuram |
| 29.12.2022 | Thursday | 10.30 am<br>6.30pm | Marriage<br>Holy Mass | Mylam<br>Beach Road |


தூய கன்னி மரியாவின்
அமலோற்பவத் திருநாள்
டிசம்பர்
08


மார்த்தாண்டம் மறைமாவட்டம்
உதயம் 1996
டிசம்பர் 16